**Proceedings of the Public Hearing Meeting Conducted to consider the issue Environmental Clearance by the State Environment Impact Assessment Authority (SEIAA – TN) for the Proposed Rough Stone and Gravel Quarry in an extent of 2.59.25 Ha by M/s.M.DAYALAN, Rough Stone And Gravel Quarry, S.F.No.293/1B, 293/2A, 293/2B, 293/2C, 295, 300/1A(Part), 301/1A1B, 301/1A2(Part) &301/1A3B of Devariyambakkam Village, Walajabad Taluk, Kancheepuram District.**

**Name of the Project:** Proposed Rough Stone and Gravel Quarry by **M/s. M.DAYALAN** Rough Stone and Gravel Quarry in an extent of 2.59.25 Ha S.F. No. 293/1B, 293/2A, 293/2B, 293/2C, 295, 300/1A(Part), 301/1A1B, 301/1A2(Part) &301/1A3B of Devariyambakkam Village, Walajabad Taluk, Kancheepuram District.

**Venue:** M/s. JS Mahal,
Uthukadu Koot Road
Uthukadu village,
Wakajabad Taluk,
Kancheepuram District – 631 601.

**Date & Time:** 18.06.2025 – 10.30 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Mr. P.I. Ashik Ali, IAS | Sub Collector<br>Kancheepuram. |
| 2. | Mr. V. Purushothaman | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 3. | Mr.V.Rangasamy | Assistant Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Kancheepuram District. |
| 4 | Mr.R.Selvarajan | Assistant Manager<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |
| 5 | Mr.R.Dravidaselvam | Typist<br>Tamil Nadu Pollution Control Board,<br>Sriperumbudur |

| | | |
|---|---|---|
| 6 | Mr.M.Dayalan | Owner of the Proposed quarry |
| 7. | Public and NGO's Environmentalists | 60 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Sriperumbdur welcomed the Sub Collector Kancheepuram, Government Officials, General Public and NGO's/ Environmentalists for the Public hearing and informed that the proposed Rough Stone and Gravel quarry by **M/s.M. Dayalan** Rough stone and gravel quarry, S.F. No. 293/1B, 293/2A, 293/2B, 293/2C, 295, 300/1A(Part), 301/1A1B, 301/1A2(Part) &301/1A3B of Devariyambakkam Village, Walajabad Taluk, Kancheepuram District. in an extent of 2.59.25 Ha attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(d) of the said notification. Furthermore, the DEE, TNPCB, Sriperumbudur has also informed the following.

The State Environment Impact Assessment Authority (SEIAA – TN) issued the Terms of Reference (ToR) with a public hearing on 11.01.2025 for preparing the Environmental Impact Assessment (EIA) report for the said activity under the Environmental Impact Assessment Notification, 2006 as amended.

The project proponent has submitted the draft EIA report to the office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur at Oragadam and requested to conduct the Public Hearing Meeting for its proposed activity. In this regard, Public Notices for this Public Hearing Meeting scheduled on 18.06.2025, were published in *Deccan Chronicle* and *Daily Thanthi Newspapers* on 22.04.2025 with the approval of the District Collector, Kancheepuram. Further, Public announcements have also been made via speakers in the surrounding villages about this Public Hearing Meeting.

The District Environmental Engineer has added that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted would be explained through a Power Point presentation by the EIA Consultant on behalf of the Project Proponent. Furthermore, the DEE has requested that, after the presentation, the public clearly state their name and village details, and then express their views, suggestions, and comments on the project, either verbally or in writing,

one by one. Additionally, he informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN and requested the Sub Collector, Kancheepuram to preside over the Meeting.

The Sub Collector, Kancheepuram has requested the Project proponent to explain about the proposed stone quarry Project and the Environmental Impact Assessment (EIA) study conducted to the Public.

Following this, on behalf of the Project Proponent, the EIA Consultant welcomed the Sub Collector, District Environmental Engineer, Government Officials, General Public and Environmentalists and then explained the Proposed stone quarry Project and EIA study conducted with help of Power Point Presentation.

After the Presentation, the Sub Collector, Kancheepuram has requested the Public to express their views / opinions either verbally or in writing by clearly stating their names and villages. Accordingly, the Public have expressed their views and opinions as follows.

**1) Mr. V.Shesathri, Devariyambakkam Village:**

He stated that the land surrounding the proposed quarry belongs to him. however, his land will not be affected in any way by the quarry. Furthermore, he expressed his support for the establishment of the proposed stone quarry project.

**2) Mr.S.Ellappan, Thondangulam Village:**

He stated that the quarry had been in operation for the past 10 to 15 years. However, it was noted that neither the village people nor the students in the village had been affected by its operation. The quarry has been depended upon by hundreds of families, and employment will be ensured not only for the villagers but also for people from the northern states. He said that the stagnant water in the quarry is used for the kurunkadugal which belongs to the village panchayat and it seems very pleasant. Finally he welcomes the quarry.

**3) Mr, Ajaykumar, Panjayat Chairman, Devariyambakkam Village.**

He stated that the Executive summary and Draft EIA Notifications was received by the District Environment Office on 24.04.2025 and that as soon as the

information was received, the Panchayat office notice board and the ration shop, library and public places were informed about this announcement on behalf of the Panchayat. Further, he said that the circular of this report in Tamil and English was placed in the Panchayat office for public reference, and not only that, awareness was also broadcast on behalf of the Panchayat through loudspeakers in all areas about the proposed quarry project. He further said that the pamplet was distributed to the public and signatures of approval were obtained, and that when he discussed it with the public as the Chairman of the Panchayat, the public raised some demands. Further he said that no objection has been received from the public against the proposal of the quarry. in the meantime, the public has given some suggestions as follows.

1. The district administration shall ensure that the quarrying activities do not adversely impact the environment and the livelihoods of the residents in this area in any manner.
2. The quarry vehicle should be is restricted for one hour each in the morning and evening during the movement of school vehicles.
3. The road is occasionally impacted by heavy vehicles therefore, it is recommended that maintenance and repairs be carried out on a weekly basis. He also stated that three quarries are operating within the Devariyambakkam panchayat limits, resulting in significant noise and air pollution in Devariyambakkam village. He requested that the basic needs of the primary schools operated by the panchayat be improved through CSR activities. Despite making six requests since 2022, the necessary basic needs have not yet been addressed using CSR funds. Therefore, he requested that these issues to be resolved.

Then, the Sub Collector, Kancheepuram said that if any other members of the public want to express their opinions, they could come forward to register their opinion, views, and suggestion. Since, no others from the public came forward to share their views, and invited the District Environmental Engineer to summarize the meeting's proceedings.

• Then, the District Environmental Engineer has summarized and also informed that the said views, suggestion and responses of the public are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority, Tamil Nadu along with the written representations received from the Public.

Furthermore, the District Environmental Engineer informed that the Proceedings of the Public Hearing Meeting will be made to be displayed at the District Collectorate, Kancheepuram, Walajabad Taluk office, Devariyambakkam Village Panchayat Office and Office of the District Environmental Engineer, TNPCB, Sriperumbudur, and also in the TNPCB website of www.tnpcb.gov.in after the said public hearing. Comments, if any, on the proceeding may be sent directly to the regulatory authorities (Member Secretary, State Environmental Impact Assessment Authority –Tamil Nadu / MoEF&CC) and the applicant concerned. Finally, the Sub Collector, Kanchipuram has thanked everyone who attended the meeting on behalf of kancheepuam District Administration.

19/06/25

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Sriperumbudur**

**Sub Collector**
**Kancheepuram**

19/6/25

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the Tamil & English Newspapers dated 22.04.2025 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 4 & 60 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions were received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting.-13 No's

**காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், தேவரியம்பாக்கம் கிராமம், புல எண்கள்.293/1B, 293/2A, 293/2B, 293/2C, 295, 300/1A(பகுதி), 301/1A1B, 301/1A2(பகுதி) & 301/1A3Bல் 2.59.25 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு. M.தயாளன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைய மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தால் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படுவது தொடர்பாக 18.06.2025 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்**

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்:** | காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், தேவரியம்பாக்கம் கிராமம், புல எண்கள். 293/1B, 293/2A, 293/2B, 293/2C, 295, 300/1A(பகுதி), 301/1A1B, 301/1A2(பகுதி) &301/1A3B ல் 2.59.25 ஹெக்டேர் பரப்பளவில் **திரு.M.தயாளன்** சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் நிறுவப்படுவது தொடர்பாக. |
| **இடம்:** | திரு.ஜெ.எஸ் மஹால், ஊத்துக்காடு கூட்ரோடு, ஊத்துக்காடு கிராமம், வாலாஜாபாத் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். |
| **நாள் மற்றும் நேரம் :** | 18/06/2025 – காலை 10.30 மணி |

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பி.ஐ.ஆசிக் அலி | சார் ஆட்சியர்,<br>காஞ்சிபுரம் |
| 2. | வி.புருஷோத்தமன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 3. | வீ.ரங்கசாமி | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர். |
| 4. | இரா.செல்வராஜன் | உதவி மேலாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |

| | | |
|---|---|---|
| 5 | இரா.திராவிடச்செல்வம் | தட்டச்சர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருப்பெரும்புதூர் |
| 6 | M.தயாளன் | உத்தேசிக்கப்பட்ட குவாரி உரிமையாளர் |
| 7 | பொதுமக்கள், தன்னார்வலர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (60 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர் அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் காஞ்சிபுரம் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், தேவரியம்பாக்கம் கிராமம், தி/ள்.M.தயாளன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி, புல எண். 293/1B, 293/2A, 293/2B, 293/2C, 295, 300/1A(பகுதி), 301/1A1B, 301/1A2(பகுதி) &301/1A3Bல் 2.59.25 ஹெக்டேர் பரப்பளவில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கீழ்க்கண்ட விவரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 11.01.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள்.M.தயாளன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டம், ஊத்துக்காடு கிராமம், தி/ள். ஜெ.எஸ்.மஹாலில் 18.06.2025 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெறும் என்று "டெக்கான் கிரானிக்கல்" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 22.04.2025 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள்.M.தயாளன் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்தை பற்றிய விவரங்களை திட்ட ஆலோசகர் (EIA Consultanat) அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார் .

திட்ட ஆலோசகர் (EIA Consultant) அவர்கள், சார் ஆட்சியர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரி தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1, திரு.V.சேஷாத்திரி, தேவரியம்பாக்கம் கிராமம்**

இவர் கூறுகையில் தங்களது கிராமத்தில் அமையவுள்ள இக்குவாரியைச் சுற்றி உள்ள நிலம் தன்னுடையது என்றும், இருந்தாலும் தன்நிலத்திற்கு இக்குவாரியால் எந்த வித பாதிப்பும் இல்லை என கூறினார். மேலும், இக் கல்குவாரி அமைவதினால் எந்த வித ஆட்சேபனையும் இல்லை எனவும் முழுமனதுடன் சம்மதிப்பதாக தெரிவித்தார்.

**2. திரு.S.எல்லப்பன், தோண்டாங்குளம் கிராமம்,**

இவர் கூறுகையில் கடந்த பத்து, பதினைந்து வருடங்களாக கல்குவாரி இயங்கி வருவதாகவும் இருந்தாலும் இதனால் இங்கு வசிக்கும் மக்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுவதாகவும், போக்குவரத்திலும் பொதுமக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுவதாகவும் கூறினார்.இக்குவாரியால் கடந்த பத்து பதினைந்து வருடங்களாக 100 குடும்பங்களின் வாழ்வாதாரம் உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கூறினார். மேலும் அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும் அதில் வடமாநில மக்களும் அடங்குவர் என்றார். கல்குவாரியில் தேங்கும் நீரை கிராம பஞ்சாயத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள குறுங்காடுகளுக்கு அந்நீர் பயன்படுத்தப்பட்டு அழகான குறுங்காடுகள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் இக்குவாரி வருவது தங்களது கிராத்திற்கு எந்தவிதமான எதிர்ப்பும் இல்லை என தெரிவித்தார்.

**3.திரு.அஜய்குமார், ஊராட்சி மன்ற தலைவர், தேவரியம்பாக்கம் கிராமம்.**

இவர் கூறுகையில் சுற்றுச்சூழலுக்கான கருத்துரு மாவட்ட சுற்றுச்சூழல் அலுவலரால் 24.04.2025 அன்று தகவல் கிடைக்கப்பெற்றதாகவும் தகவல் கிடைக்கப்பெற்றவுடன் ஊராட்சி அலுவலக தகவல் பலகை மற்றும் நியாயவிலைக் கடை, நூலகம் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் இந்த அறிவிப்பு குறித்து ஊராட்சியின் சார்பில் தெரிவிக்கப்பட்டதாக தெரிவித்தார். மேலும், இந்த அறிக்கையின் சுற்றறிக்கை தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவை பொதுமக்களின் பார்வைக்காக ஊராட்சி மன்றத்தில் வைக்கப்பட்டதாகவும், அது மட்டுமல்லாமல் ஊராட்சியின் சார்பாக ஒலிபெருக்கியின் மூலம் அனைத்து பகுதிகளிலும் உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரி திட்டம் குறித்து விழிப்புணர்வு ஒலிபரப்பும் செய்யப்பட்டதாகவும் மேலும், பொதுமக்களிடம் சுற்றறிக்கை வழங்கப்பட்டு ஒப்புதல் கையெழுத்து பெறப்பட்டதாகவும், பொதுமக்களிடம் ஊராட்சி மன்ற தலைவர் என்ற முறையில் கலந்துரையாடியபோது பொதுமக்கள் சில கோரிக்கைகளை முன்வைத்ததாக தெரிவித்தார். மேலும், பொதுமக்கள் சார்பில் தற்போது வரை எந்த ஒரு எதிர்ப்பும் பெறப்படவில்லை எனவும், இருந்தபோதிலும் பொதுமக்கள் சில ஆலோசனைகளை வழங்கியதாக தெரிவித்தார்.

1. இக்குவாரியினால் சுற்றுச்சூழலுக்கும் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரமும் எந்த வகையிலும் பாதிக்காதவாறு மாவட்ட நிர்வாகம் கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும்.
2. பள்ளி மற்றும் அலுவலகம் செல்லும் நேரங்களான காலை மற்றும் மாலை வேலையில் ஒரு மணிநேரம் கல்குவாரி வாகனங்கள் செல்ல தடை செய்யப்படவேண்டும் எனவும்.
3. கனரக வாகனங்களால் அவ்வப்போது சாலை பாதிக்கப்படுவதாகவும் இதனால் வாரத்திற்கு ஒரு முறை சாலைகளை பராமரித்து சரிசெய்ய வேண்டும் எனவும்,

4. மேலும் தேவரியம்பாக்கம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மூன்று கல்குவாரிகள் செயல்படுவதாகவும், இதனால் தேவரியம்பாக்கம் கிராமம் ஒலி மற்றும் ஒளி மாசினால் அதிகமாக பாதிக்கப்படுவதாகவும் எனவே கனிமவள அறக்கட்டளையின் கீழ் நிதி ஒதிக்கீடு செய்து ஊராட்சியின் கீழ் செயல்படும் தொடக்கப்பள்ளியின் கழிவறைகள் மற்றும் அடிப்படை தேவைகளை சரி செய்து தரக்கோரி 2022ம் ஆண்டு முதல் இதுவரை 6 முறை கோரிக்கை அளிக்கப்பட்டதாகவும் இதுவரையில் கனிமவள அறக்கட்டளையின் நிதியின் மூலம் எந்தவித அடிப்படை தேவையும் செய்துகொடுக்கப்படவில்லை எனவும், எனவே அவற்றை செய்து தருமாறு கேட்டுக்கொண்டார்.

சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் வேறு எவரேனும் தங்களது கருத்துக்களை கூற வரலாம் என அழைப்பு விடுத்தார். அதனை தொடர்ந்து வேறு எவரும் கருத்துக்களை கூற முன்வரைவில்லை என்பதால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை கூட்ட நடவடிக்கை பற்றி சுருக்கமாக எடுத்துரைக்க கேட்டுக்கொண்டார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், திட்டம் குறித்த பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகளின் சுருக்கத்தை எடுத்துரைத்தார். மேலும், இப்பொதுமக்களின் கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை தொகுத்து, ஒலி மற்றும் ஒளி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும் மேற்குறிப்பிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பின்படி, பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வாலாஜாபாத் வட்டாட்சியர் அலுவலகம், தேவரியம்பாக்கம் கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருப்பெரும்புதூர், ஒரகடம் ஆகிய இடங்களில் வைக்கப்படும் எனவும், மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.inல் வெளியிடப்படும் எனவும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. இறுதியாக சார் ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருப்பெரும்புதூர்.**

**சார் ஆட்சியர்,**
**காஞ்சிபுரம்.**

<u>**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 22.04.2025).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (4 பக்கங்கள் 60 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட அடங்கிய Pendrive – 2 No's

4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 13 மனுக்கள்.